தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

ஆவணி 6, பிரமோதூத— திருவள்ளுவர் ஆண்டு 2021
1990 ஆகஸ்டு 22, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும் .''

ஒருவர் செய்யத் தகாத செயல்களைச் செய்தால் அதனால் கேடு உண்டாகும். செய்ய வேண்டிய செயல்களைச் செய்யாமல் விட்டாலும் கேடு உண்டாகும்.

1. வினாக்கள்-விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 807 மற்றும் 2264 ஆகியவை சற்று நேரம் தள்ளி வைக்கப்படுகின்றன.

கரும்பலகைத் திட்டம்.

*7061 திரு. கோ. வீரையன் :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கரும்பலகைத் திட்டத்தின் கீழ் (ஆப்பரேஷன் பிளாக் போர்டு) மத்திய அரசு ஆரம்பப் பள்ளிகளுக்கு கூடுதல் ஆசிரியர் இடங்கள் ஒதுக்கியதா ?

(ஆ) அதற்காக எவ்வளவு நிதி ஆதாரம் வழங்கப்பட்டது ?

(இ) அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ரூ. 244.08 இலட்சம் ஆகும்.

(இ) கூடுதல் இடைநிலையாசிரியர் பணியிடங்கள் 1,643 புதிதாக ஏற்படுத்தப்பட்டன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS